# பிற கலாச்சாரத்தை சார்ந்த தன் எஜமானனுக்கு உதவிய ஓர் அடிமைப் பெண்

**நம்மை விட வேறாக இருக்கும் மக்களை நேசிக்க சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்**

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, பார்வையற்றோர், காதுகேளாதோர், பிற கலாச்சார மக்கள் உள்ளிட்ட தங்களை விடவும் வேறுபட்ட மக்களை நேசிக்க சிறுவர்களுக்கு இந்தப் பாடத்தைக் கொண்டு உதவுவீராக."

சிறுவர்களின் வயது, புரிந்து கொள்ளும் நிலை, தேவைகள் ஆகியவற்றிற்கு பொருத்தமான கல்வி செயல்பாட்டைத் **தெரிந்து கொள்க.**

குஷ்டரோகியான பழைய அரிமிய (சிரிய) இராணுவத் தளபதியான நாகமானைப் பற்றி **2 இராஜா 5:1-16** ல் இருந்து போதிக்க ஆயத்தமாகுக. தேவ அன்பை அறிந்து கொள்ள அவனுக்கு எவ்வாறு ஒரு சிறுபெண் உதவினாள் என்பதை அது கூறுகிறது.



ஒரு பெரிய பிள்ளை இந்தக் கதையை **வாசிக்கவோ** அல்லது **மனப்பாடமாகக் கூறவோ** செய்யலாம். பின் கேள்விகளைக் கேட்கவும் *(பதில் ஒவ்வொரு கேள்விக்குப் பின்னால் வருகிறது).*

- நாகமான் எப்படிப்பட்ட மனிதன்? அவனுக்கு என்ன நோய் இருந்தது? *(1)*
- ஒரு இஸ்ரவேல் நாட்டு சிறுபெண் ஏன் ஓர் அரபிய குடும்பத்தோடு வாழ்ந்தாள்? *(2)*
- ஓர் அடிமையாக இருந்தபோதும் தன் எஜமானனுக்கு அவள் எவ்வாறு தன் அன்பைக் காட்டினாள்? *(3)*
- குணமாகும்படி நாகமனுக்கு எலிசா கூறிய அறிவுரை என்ன? *(10).*
- எலிசாவின் அறிவுரை குறித்து நாகமான் என்ன உணர்ந்தான்? *(11)*
- எலிசா எவ்வாறு தன்னை நடத்துவான் என்று நாகமான் எதிர்பார்த்தான்? *(11. நாகமான் ஒரு பணக்காரனும் முக்கியமான மனிதனுமாக இருந்ததால் எலிசா ஓர் அற்புதமான அடையாளத்தைச் செய்வான் என்று நாகமான் எதிர்பார்த்தான்)*
- தீர்க்கதரிசியின் அறிவுரைப்படி நடக்குமாறு நாகமானை வற்புறுத்தியது யார்? *(13)*
- நாகமானை குணமாக்கியதற்கு எலிசா பணம் ஏன் கேட்கவில்லை? *(16. தேவனை நம்பி கீழ்ப்படிந்ததினாலேயே தவிர அவன் பணக்காரனும் முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருப்பதால் தேவன் அவனைக் குணமாக்கவில்லை என்பதை நாகமான் அறிந்துகொள்ள வேண்டும் என்று எலிசா விரும்பினான்).*

நாகமான் கதையை, **நாடகமாக்குக.** ஏற்றதாக இருந்தால் சில பகுதிகளை மட்டுமே நாடகப்படுத்துக.

- சபைத்தலைவரோடு பேசி ஆராதனை வேளையில் சிறுவர்கள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- சிறுவர்களுக்கு, ஆயத்தப்படுத்துவதில் பெரிய பிள்ளைகள் உதவி செய்யட்டும்.
- **பெண்சிறுமி, மனைவி, நாகமான், கேகேசி, இஸ்ரவேல் அரசன், எலிசா, கதை கூறுபவர்** பகுதிகளைப் பெரிய பிள்ளைகள் நடிக்கட்டும். நாகமான் ஒரு காகிதத்தை வைத்துக் கொள்ளட்டும்.

- சிறிய பிள்ளைகள் **நாகமானின் வேலைக்காரர்** பாத்திரத்தை ஏற்கட்டும்.

**கதை கூறுபவர்:** 2 இராஜா. 5:1-16 லிருந்து கதையைக் கூறட்டும். பின் கூறுவது, "இதோ, நாகமானின் மனைவியிடம் வேலைக்கார சிறுமி கூறுவதைக் கேளுங்கள்."

**சிறுமி** : "அம்மா! குஷ்டரோகம் இருப்பதால் என் எஜமானர் நாகமான் வருத்தமாய் இருக்கிறார். நான் அவருக்கு உதவி செய்ய விரும்புகிறேன். இஸ்ரவேலில் இருக்கும் தேவனுடைய தீர்க்கதரிசியைப் போய்ப் பார்க்குமாறு அவரை வேண்டிக் கொள்ளுங்கள்."

**நாகமானின் மனைவி:** நாகமானிடம் சென்று கூறுகிறாள்: "நீங்கள் எல்லா வழிகளையும் முயன்று பார்த்துவிட்டீர்கள். இஸ்ரவேலில் இருக்கும் அந்தத் தீர்க்கதரிசியைத் தேடிச் சென்று பாருங்கள். அவர் உங்களை குணமாக்கக் கூடும்!"

**நாகமான்:** "நான் சீரியாவின் இராவிடம் ஒரு நிரூபம் கேட்பேன்!" (இஸ்ரவேலின் இராஜாவிடம் வேலைக்காரர்களோடு சென்று நிருபத்தைக் கொடுத்து, பின் கூறுவது) "இஸ்ரவேலின் இராஜாவே. சீரிய தேசத்து என் இராஜாவின் வேண்டுகோளை தயை கூர்ந்து வாசியும். என்னுடைய குஷ்டரோகத்தை நீக்கும் தீர்க்கதரிசி எங்கு இருக்கிறான் என்பதைக் கூறும்!"

**இஸ்ரவேலின் இராஜா:** "குஷ்டரோகத்தைக் குணமாக்க நான் என்ன கடவுளா? உங்கள் மன்னர் என்னோடு சண்டை போட நினைக்கிறாரா?"

**நாகமானும் வேலைக்காரர்களும்:** தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு வருத்தத்துடன் நடந்து போகின்றனர். வேலைக்காரர்கள் இது போன்று பேசிக் கொள்கின்றனர்: "எவ்வளவு வருத்தமாய் இருக்கிறது!" "இந்த மோசமான நோயைக் குணப்படுத்த யாருமில்லையே!"

**கேயாசி** : நாகமானிடம் சென்று வணங்குகிறான். "தளபதி! என் எஜமானராகிய எலிசா, ஒரே மெய் தேவனின் வல்லமையை உமக்குக் காட்டுவார். வந்து அவரைப் பாரும்!"

**நாகமான்:** தன் வேலைக்காரர்களிடம் கூறுகிறான். "இப்போது நாம் அதிக வல்லமையை உபயோகிக்கும் ஒருவரைப் போய் பார்ப்போம். நான் அதிகாரம் உள்ள மனிதன். அதற்காக என்னால் அதிகமான பணம் செலவழிக்க முடியும்!"

**கேயாசி** : "நாகமானே! என்னுடைய எஜமானர் யோர்தான் நதியில் ஏழு முறை உம்மைக் குளிக்கச் சொன்னார்."

**நாகமான்:** (கோபத்துடன்) "முடியாது! நான் அந்த அழுக்குத் தண்ணீரில் குளிக்க மாட்டேன். எங்கள் நாட்டு ஆறுகள் சுத்தமாக இருக்கும்."

**வேலைக்காரர்கள்:** இதுபோன்று கூறவும்: "ஏதாவது ஒரு பெரிய காரியத்தை அவர் சொல்லி இருந்தால் செய்திருப்பீர் அல்லவா?" "தயைகூர்ந்து போவீராக." "தேவ தீர்க்கதரிசி கூறியதைப் போலச் செய்யும்."

**நாகமான்:** ஏழு தடவை ஆற்றில் முங்குவது போல் பாவிக்கவும்.

**வேலைக்காரர்கள்:** இது போல் கூறுவது: "பாருங்கள்! அவரது குஷ்டரோகம் மறைந்து விட்டது!" "அவர் குணமாகி விட்டார்!"

**நாகமான்:** எலிசாவிடம் சென்று கூறுதல், "இந்த அற்புதத்துக்காக நான் உமக்கு நிறைய பணம் கொடுப்பேன்!"

**எலிசா** : "இல்லை! தேவனுக்குப் பணம் தேவை இல்லை. அவர் உம்மை குணமாக்கினார். அவர் ஒரே மெய் தேவன் என்பதைக் காட்டவே இதைச் செய்தார்."

**நாகமான்:** சிறுமியிடம் சென்று தலை வணங்கி "சிறு பெண்ணே! நன்றி! உண்மையான ஒரே தெய்வம் யார் என்பதை அறிய வைத்தாய். உன் நாட்டில் இருந்து உன்னை நான் அடிமையாகப் பிடித்து வந்த போதிலும் நீ என் மேல் அக்கறை காட்டினாய்."

**கதை கூறுபவர்:** நாடகத்தை அரங்கேற்ற உதவிய யாவருக்கும், கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறுதல்.

**கேள்விகள்:** இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் பட்டியல் இடப்பட்டுள்ள (மேலே) கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

**வரைதல்** ஆற்றில் குளிக்கும் மனிதனின் படத்தை சிறுவர்கள் பார்த்து வரையட்டும்.

- ஆராதனை வேளையில் சிறுவர்கள் இந்தப் படத்தைப் பெரியவர்களிடம் காட்டவும்.
- தேவன் சிறுபிள்ளைகளின் அன்பை உபயோகித்து தாம் குணப்படுத்தி மன்னிக்கிறவர் என்பதை மக்களுக்குக் காட்டுகிறார். இதை இப்படம் உணர்த்துகிறது என்று விளக்கவும்.

**விவாதம்:** நம்மை விட வேறுபட்ட மக்களை நேசித்து சேவை செய்வதற்கு வேறு உதாரணம் தருமாறு பிள்ளைகளிடம் கேட்கவும்.

**சங்கீதம்:** யோபு 42:1-6 ஐ மூன்று பிள்ளைகள் ஒப்புவிக்கட்டும்.

சங்கீதம் 67 ல் உள்ள வார்த்தைகள் அல்லது கருத்துக்களைக் கொண்டு எல்லா நாட்டு மக்கள் மேலும் தேவன் காட்டும் அன்பைப் பற்றி **பெரிய பிள்ளைகள்** கவிதையோ பாடலோ எழுதவும். இதை அவர்கள் வாரநாட்களில் செய்யட்டும்.

**மனன வசனம்:** சங். 67:2-3.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே, எங்களை விட மாறுபட்ட மக்களை நேசிக்க உதவும். குருடர், செவிடர், பிற கலாச்சார மற்றும் மதம் சார்ந்த மக்கள் ஆகியோர் மேல் அன்பு காட்ட உதவும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net